# மியன்மாவில் தமிழ்மொழி
# Tamil Language in Myanmar

இணைப் பேராசிரியர் முனைவர் சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேல் / Assoc. Prof. Dr. Samikkanu Jabamoney Ishak Samuel [1]

முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை / Dr. Manonmani Devi M.A.R Annamalai[2]

முனைவர் பிரங்லின் தம்பி ஜோஸ் / Dr. Franklin Thambi Jose. S[3]

முனைவர் சரவணன் வீரமுத்து / Dr. Saravanan P.Veeramuthu[4]

## *Abstract*

The major objective of the research is to explore the migration of Tamils and the Tamil language development in Myanmar. This qualitative research incorporates methods such as field work and library work. The findings show that the Tamils have migrated to Myanmar and have developed Tamil Language there. During the *Chola* period, Tamils migrated by sea to the southern part of Myanmar. During the British rule, the Tamils were taken to work in the paddy fields, construction sites and government departments. *The Tamil Illam Tirukkural Peravai*, *Tamil Valarchi Maiyam*, *Kalaimagal Tamil Kalvi Niruvanam* and *Valluvar Kottam* contribute to Tamil language development in Myanmar.This study is useful in teaching the younger generation about the development of Tamil language in Myanmar. Moreover, the researcher claims that this is the first attempt to contribute to the Tamil language development in Myanmar in the form of a research article.

Date of submission: 2020-06-25
Date of acceptance: 2020-06-27
Date of Publication: 2020-07-20

Corresponding author's
Name:
Dr. Samikkanu Jabamoney
Email:
samjabarose@yahoo.com.my

**Key Words:** Myanmar, Tamils, Tamil language, Tamil developmentr, Tamil Traders

### அறிமுகம்

தமிழினம் உலகில் தோன்றிய இனங்களில் மூத்த இனமாகக் கருதப்படுகிறது. தமிழினம் கிறித்துவுக்கு முன் 10,000 ஆண்டு வரலாற்றைக் கொண்டுள்ளது.தமிழ் நாடு, ஈழம் ஆகிய இடங்களைப் பூர்வீகமாகக் கொண்டவர்களாகத் தமிழர்கள் திகழ்கின்றனர். தமிழர்கள், கிறித்துப் பிறப்புக்கு முன்பே கடல் பயணம் மேற்கொண்டு பல நாடுகளில் வாணிகம் செய்ததாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். பல்லவர் ஆட்சிக் காலத்திலும் சோழர்

[1] The author is an Assiciate Professor in Tamil Language Programme, Sultan Idris Education University, Malaysia. samjabarose@yahoo.com.my

[2] The co-author is a lecturer in Tamil Language Programme, Sultan Idris Education University, Malaysia. manonmanidevi@fbk.upsi.edu.my

[3] The co-author is a lecturer in Tamil Language Programme, Sultan Idris Education University, Malaysia. thambijoshs@gmail.com

[4] The co-author is a lecturer in University of Science Malaysia, Malaysia. saravanan@usm.my

ஆட்சிக் காலத்திலும் தமிழர்கள் தென்கிழக்காசியாவிற்குக் கடல் பயணம் மேற்கொண்டு பல்வேறு நாடுகளில் வாணிகம் செய்துள்ளதாகவும் ஆட்சி அமைத்துள்ளதாகவும் வரலாறு கூறுகின்றது. இவ்வாறு சிறப்புற்றிருந்த தமிழர்கள் ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேயர்களாலும் டச்சுக்காரர்களாலும் பிரான்சுகாரர்களாலும் மலேசியா, சிங்கப்பூர், மியான்மா, மொரிசியஸ், பீஜி, ரியூனியன், தென் ஆப்பிரிக்கா, இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்குக் கூலித் தொழிலாளர்களாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

ஆங்கிலேயர்கள் தமிழர்களை மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு ரப்பர் தோட்டங்களில் வேலை செய்வதற்கும் மியன்மாவுக்கு நெல் பயிரிடுவதற்கும் கொண்டு சென்றுள்ளனர். டச்சுக்காரர்கள் தமிழர்களைப் புகையிலைத் தோட்டத்தில் வேலை செய்வதற்கு மேடான், இந்தோனேசியாவிற்கும் கொண்டு சென்றுள்ளனர். பிரான்சுகாரர்கள் தமிழர்களை மொரிசியஸ், பீஜி, ரியூனியன், தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்குக் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்வதற்கு அழைத்துச் சென்றுள்ளனர். மேலும், இலங்கையில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டபோது ஈழத் தமிழர்கள் பல்வேறு ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.இன்று உலகின் 164 நாடுகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

## முந்தையஆய்வுகள்

மியன்மா நாட்டிற்குப் புலம்பெயர்ந்து சென்றுள்ள இந்தியர்கள் குறித்த ஆய்வுகளைக் கண்ணோட்டமிடுகையில், ஆய்வாளர் இரண்டு முதுகலைப் பட்ட ஆய்வுகளையும் பன்னிரெண்டு ஆய்வுக் கட்டுரைகளையும் இரண்டு புத்தகங்களையும் ஓர் ஆய்வடங்களையும் ஆய்வு செய்துள்ளார்.

Sarita Rai (2015), இந்தியா, மியன்மா உறவில் இந்தியப் புலம்பெயர்ந்தோரின் பங்கு என்ற தலைப்பில் ஒரு முதுகலைப் பட்டத்திற்கான ஆய்வைச் செய்துள்ளார். 19 ஆம் நூற்றாண்டில் இந்தியர்கள் மியன்மாவுக்கு அதிகமாகப் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர். மியன்மா விடுதலை பெற்றபின் 1962ஆம் ஆண்டில் இராணுவ ஆட்சி ஏற்பட்டது. மியன்மாவில் இந்தியர்களின் சொத்துத் தேசியமயமாக்கப்பட்டன. இதனால், மியன்மா இந்தியர்கள் இந்தியாவிற்கு அகதிகளாகத் திரும்பினர். இவ்வாறு இந்தியர்கள் நாடு திரும்பும் போது இந்தியாவிற்கும் மியன்மாவிற்கும் இடையே ஏற்பட்ட அரசியல் உறவுகளை இவ்வாய்வு விவரிக்கின்றது.

Soe Soe Oo (2011), காலனித்துவ ஆட்சியில் மியன்மா பொருளாதாரத்தில் செட்டியார்களின் பங்கு என்ற தலைப்பில் முனைவர் பட்டத்திற்கான ஆய்வைச் செய்துள்ளார். காலனித்துவ ஆட்சியில் தமிழர்கள் மியன்மாவுக்கு அதிகமாகப் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர். அவர்களில் செட்டியார்களும் அடங்குவர். செட்டியார்கள் வட்டித்தொழில் செய்வதற்காக மியன்மாவிற்குச் சென்றனர். இவர்கள் உள்நாட்டு மக்களுக்கு அதிக அளவில் வட்டி கொடுத்தனர். இம்மக்கள் வட்டியையும் முதலையும் திருப்பித் தர இயலாத போது அவர்களின் விவசாய நிலங்களை அபகரித்துள்ளனர். மேலும், இம்முதுகலை ஆய்வில் மியன்மா பொருளாதாரத்தில் செட்டியார்கள் ஆற்றிய பங்கு விவாதிக்கப்பட்டுள்ளது.

Harkirat Singh (2019), மியன்மா, மலாயா இந்தியர்கள்: காலனித்துவ ஆட்சியில் ஓர் ஆய்வு என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார். இவ்வாய்வுக் கட்டுரையில் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் தென்கிழக்காசிய நாடுகளான மியன்மா, மலாயா ஆகிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்ற இந்தியர்களைப் பற்றி விவரிக்கின்றது. மியன்மாவிற்கு நெல் வயல்களில் வேலை செய்வதற்கும் மலாயாவிற்கு ரப்பர் தோட்டங்களில் வேலை செய்வதற்கும் இந்தியர்கள் பெரும்வாரியாக ஆங்கிலேயர்களால் கொண்டு செல்லப்பட்டனர் என்பதை இவ்வாய்வுக் கட்டுரை விளக்குகின்றது.

Hmma Balakrishnan (2019), இது யாருடைய மொழி? மியான்மாரில் தமிழ்மொழி புத்துயிர்

முயற்சிகளுக்குச் சவால்கள் என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார். இந்த ஆய்வுக் கட்டுரை 2010ஆம் ஆண்டுக்குப் பிந்தைய யாங்கோனில் வாழும் மியன்மா தமிழர்கள் மேற்கொண்ட தமிழ்மொழி புத்துயிர் முயற்சிகளை ஆராய்கிறது. இந்த ஆய்வுக்குத் தேவையான தரவுகள் நேர்காணல் வழியாகவும் உற்றுநோக்கல் வழியாகவும் திரட்டப்பட்டுள்ளன. மேலும், இந்த ஆய்வுக் கட்டுரை மியன்மா தமிழ்க்குமுகாயத்தைச் சேர்ந்தவர்கள் தமிழைப் புதுப்பிக்கப் பயன்படுத்திய சில உத்திகளை எடுத்துக்காட்டுகிறது. தமிழ்க் குமுகாயத்தினரிடையே ஏற்பட்டுள்ள கருத்துகள் காரணமாகத் தமிழ்மொழி புத்துயிர் முயற்சிகளுக்குச் சவாலாக அமைந்துள்ளன என்பதும் இவ்வாய்வுக் கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளது. தமிழ்மொழி புத்துயிர் திட்டங்களுக்கு வெளிப்புற ஆதரவு மட்டுமன்றி சிறுபான்மை குமுகாயத்தின் உள் ஆதரவும் முக்கியமானது என்பதை இவ்வாய்வு கட்டுரை வலியுறுத்துகின்றது.

Chakraborty Ankita (2019), காலனித்துவ ஆண்டுகளில் மியான்மாரில் இந்தியக் குடியேறியவர்களின் சமூகப் பொருளாதார நிலை (18241948): ஒரு கண்ணோட்டம் என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையை எழுதியுள்ளார். மியன்மா இந்தியாவுக்கு அருகாமையில் இருந்ததால், பண்டைய காலத்திலிருந்தே மியன்மாருக்கு இந்தியர்கள் குடியேறியுள்ளனர்.ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில், இக்குடியேற்றம் பெருமளவில் நடைபெற்றுள்ளது. இந்தியர்கள் மியன்மா பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தியதால், மியன்மா பூர்வக்குடி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால், இனக் கலவரங்கள் நடைபெற்றன. இராணுவ ஆட்சி காலத்தில் அதிகமான இந்தியர்கள் இந்தியாவுக்குத் திரும்பிச் சென்றனர். இருப்பினும், இந்த ஆய்வுக் கட்டுரை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்தியர்களின் சமூகப் பொருளாதார நிலையையும் அவர்கள் பெற்ற சலுகைகளையும்அவர்கள் ஆற்றிய பங்குகளையும் விவரிக்கின்றது.

Mohammad Janesar & Rajesh Sahu (2019), இந்திய புலம்பெயர்ந்தோரின் பங்கு: இந்தியா, மியன்மா ஒரு கண்ணோட்டம் என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார். இந்தியாவும் மியன்மாவும் எல்லை நாடுகளாகையால் பண்டைக் காலம் தொடங்கி இரண்டு நாடுகளுக்கும் இடையே நெருக்கமான சமூக,வணிக, அரசியல், கலாச்சார உறவுகள் பேணப்பட்டு வருகின்றது. மேலும், ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில் அதிகமான இந்தியர்கள் மியன்மாவுக்குப் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர். மியான்மாவில் இராணுவ ஆட்சி காலத்தில் அதிகமான இந்தியர்கள் அகதிகளாக இந்தியர்கள் நாடு திரும்பிய பின்னும் இந்தியாவிற்கும் மியன்மாவுக்கும் இடையேயுள்ள உறவு பேணப்பட்டு வருகின்றது.

Chakraborty Ankita (2018), மேற்கு வங்கத்தின் பர்மா காலனிகள்: பர்மிய இந்தியர்களின் தற்கால நிலை ஓர் ஆய்வு என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையை எழுதியுள்ளார். இந்தியாவும் மியன்மாரும் அருகாமையில் அமைந்த இரண்டு நாடுகளாகும். மியன்மா வடகிழக்கு இந்தியாவின் நான்கு மாநிலங்களுடன் எல்லையைப் பகிர்ந்து கொண்டுள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அதிகமான இந்தியர்கள் மியன்மாவுக்குப் புலம்பெயர்ந்து சென்றனர். இவ்வாறு, புலம்பெயர்ந்து சென்றவர்களில் தமிழ்நாட்டுச் செட்டியார்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் மியன்மாவில் வட்டித் தொழிலை மேற்கொண்டுள்ளனர். ஆங்கிலேயர்களும் அரசாங்கப் பணிகளுக்கும் நெல் பயிரிடுவதற்கும் இந்தியர்களை மியன்மாவுக்கு அழைத்துச் சென்றுள்ளனர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இரங்கூன் இந்தியர்களின் மையமாக மாறியது. இரங்கூனில் இந்திய மக்களின் எண்ணிக்கை மியன்மா மக்களின் எண்ணிகையை விட அதிகமாக இருந்தனர். ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பின் மியன்மா அரசு தேசியமயமாக்கல் கொள்கையையும் குடியுரிமைச் சட்டத்தையும் அறிமுகப்படுத்தியது. இதன் காரணமாக, இந்தியர்கள் தங்கள் தொழில்களையும்

வேலைகளையும் இழந்தனர். 1964ஆம் ஆண்டு தொடங்கி மியன்மா இந்தியர்கள் அகதிகளாக இந்தியாவிற்குத் திரும்பினர். இந்திய அரசாங்கம் இவர்களுக்காக இந்தியாவின் பல்வேறு இடங்களில் பர்மா காலனிகள் என்ற பெயரில் சிறப்புக் குடியிருப்புப் பகுதிகளை உருவாக்கிக் கொடுத்துள்ளனர். அவ்வாறு மேற்கு வங்கத்தில் உருவாக்கப்பட்டுள்ளபர்மா காலனிகளில் வாழும் பர்மிய இந்தியர்களின் தற்காலச் சமூக பொருளாதார நிலை குறித்து இவ்வாய்வுக் கட்டுரை விவரிக்கிறது.

Nadaraja Pillai, N. (2018). தென்கிழக்காசிய மொழிகளின் எழுத்து வரி வடிவங்களில் தமிழ்மொழியின் பங்கு என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார். இவ்வாய்வுக் கட்டுரையில் மியன்மா மொழியில் காணப்படும் எழுத்து வரி வடிவங்களில் தமிழ் எழுத்துகளின் தாக்கம் எவ்வாறு உள்ளது என்பதைக் குறித்து ஆய்வு செய்துள்ளார்.

Nongthombam Jiten (2018), மியன்மா இந்திய புலம்பெயர்ந்தோர் ஆய்வில் மெய்தேய் இனமக்களின் நிலை என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார். மெய்தேய் இனமக்கள் மணிப்பூர், இந்தியாவில் வாழும் ஒரு முக்கியப் பழங்குடியினர். இவ்வாய்வுக் கட்டுரை, மியன்மா, இந்தியா ஆகிய நாடுகளின் விடுதலைக்குப் பின் மெய்தேய் இனமக்களின் நிலையை ஆராய்கிறது.

Sunil S Amrith <https://www.thelancet.com/journals/lancet/article/PIIS0140-6736(14)61976-0/fulltext> (2014), தென்கிழக்காசிய வரலாற்றில் புலம்பெயர்வும் சுகாதாரமும் எனும் தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரை இயற்றியுள்ளார். இவ்வாய்வுக் கட்டுரையில் 19ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இந்தியாவிலிருந்தும் சீனாவிலிருந்தும் மியன்மா, மலாயா, சிங்கப்பூர், இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்ற மக்களின் புலம் பெயர் வரலாறுகளும் அவர்களின் சுகாதாரமும் ஆராயப்பட்டுள்ளன. இக்கட்டுரையில் மியன்மா தமிழர்களின் புலம்பெயர்வும் அவர்களின் சுகாதாரமும் ஆராயப்பட்டுள்ளன.

Renaud Egreteau. (2013). இந்தியாவில் மறைந்துவரும் பர்மா காலனிகள்: 1960ஆம் ஆண்டுகளிலிருந்து இந்தியா திரும்பிய பர்மா இந்தியர்களுக்கு மாற்று இடம், குடியுரிமை, வேறு இடங்களுக்கு மாறிசெல்ல அனுமதி வழங்குதல் என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரை இயற்றியுள்ளார். 1964ஆம் ஆண்டு முதல் 1980ஆம் ஆண்டு வரை மியன்மாவிலிருந்து இந்தியா திரும்பிய மியன்மா இந்திய அகதிகளுக்கு இந்திய அரசாங்கம் பர்மா காலனிகளை அமைத்துக்கொடுத்திருக்கிறது.இந்த ஆய்வுக் கட்டுரை இந்தியா திரும்பிய பர்மா இந்தியர்களுக்கான மாற்று இடம், குடியுரிமை, வேறு இடங்களுக்கு மாறிசெல்ல அனுமதி ஆகியவற்றை ஆராய்கிறது. தற்போது, இந்தியா திரும்பிய பர்மா இந்தியர்களின் இரண்டாம் தலைமுறையினர் இந்திய மக்களுடன் ஒருங்கிணைந்து விட்டனர். மேலும், பர்மா காலனிகள் அதன் முக்கியத்துவத்தை இழந்துவிட்டன.

Renaud Egreteau (2011), சமகாலப் பர்மாவில் பர்மிய இந்தியர்கள்: 1988 முதல் பாரம்பரியம், செல்வாக்கு, உணர்வுகள் என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையை எழுதியுள்ளார். இந்த ஆய்வுக் கட்டுரை 1988ஆம் ஆண்டுக்குப் பிந்தைய மியன்மா இந்தியர்களின் பாரம்பரியமும் செல்வாக்கும் ஆராயப்பட்டுள்ளன. மேலும், இந்தியர்கள் மியன்மா நாட்டின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கும் மியன்மா பூர்வக்குடி மக்கள் இந்தியர்கள் மீது கொண்ட பகைமை உணர்வுகளும் ஆராயப்பட்டுள்ளன. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில், இந்தியர்கள் அதிகமாக மியன்மாவிற்குப் புலம்பெயர்ந்து, மியன்மா நாட்டின் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தினர். இந்நிலை மியன்மா பூர்வக்குடி மக்களிடையே அதிருப்தியை உண்டாக்கியது. இதனால், இந்திய எதிர்ப்புக் கலவரங்கள் வெடித்தன. மியன்மா நாட்டின் விடுதலைக்குப் பின் இராணுவ ஆட்சியின் கீழ்ச் செயல்படுத்தப்பட்ட சட்டங்கள் இந்தியர்களுக்குப் பாதகமாக அமைந்தன.

Vikas Kumar Verma (2006), பழங்காலத் தமிழ்நாட்டிற்கும் தென்கிழக்காசியாவிற்கும் இடையே நடைபெற்ற கடல்சார் வணிகம் என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையை இயற்றியுள்ளார். பழங்காலத் தமிழ்நாட்டிற்கும் தென்கிழக்காசியாவிற்கும் இடையே நடைபெற்ற கடல்சார் வணிகம் குறித்து இவ்வாய்வுக் கட்டுரை விவரிக்கின்றது. சங்க காலம் தொடங்கி தமிழர்கள் உலகின் பல்வேறு பகுதிகளுக்குக் கடல் பயணம் சென்று வர்த்தகம் செய்துள்ளனர். பல்லவர் ஆட்சி காலத்திலும் சோழர் ஆட்சிக் காலத்திலும் தமிழர்கள் தென்கிழக்காசியாவிற்குக் கடல் பயணம் சென்று பல்வேறு நாடுகளைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்துக்கொண்டு வணிகம் செய்துள்ளனர். சோழ மன்னன் கரிகால் வளவன் ஆட்சிக் காலத்தில் கடல் வழியாகப் படையெடுத்து மியன்மாவின் தென்பகுதியான பக்கோவரையில் அரசாட்சி செய்ததாகவும் கடல் வழியாக மியன்மா வந்த தமிழர்கள் அயிராவதி நதி வழியாக உட்பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள கரையோர நகரங்களில் வியாபரத்தில் ஈடுப்பட்டதாகவும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

James Warren (2002), *1930ஆம் ஆண்டு இரங்கூன் சிறைக் கலவரமும் பிரிட்டிஷ் பர்மாவின் சிறை நிர்வாகமும்* என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையை எழுதியுள்ளார். 1930ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ரங்கூன் மத்திய சிறையில் ஏற்பட்ட கலவரத்தையும் ஆங்கிலேயர்களின் சிறை நிருவாகத்தையும் இவ்வாய்வுக் கட்டுரை விவரிக்கின்றது. இரங்கூன் சிறையில் அதிகமான இந்தியர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருந்ததால் மியன்மா கைதிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. இதனால், இக்கைதிகள் இந்திய பணியாளர்களிடம் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இஃது இரங்கூன் சிறை போராட்டமாக வெடித்தது. இப்போராட்டத்திற்கு ஆங்கிலேயர்களின் பிரித்து ஆளும் முறைதான் காரணம் என்ற கூற்றுத் தவறானதாகும். ஆங்கிலேயர்கள் தங்களுடைய நிர்வாக வசதிக்காகவே இந்தியர்களைச் சிறைச்சாலை பணிக்கு அமர்த்தியிருந்தனர். இந்தியர்கள் செயல் திறன்மிக்கவர்களாக இருந்ததால் ஆங்கிலேயர்கள் இந்தியர்களைச் சிறைச்சாலை பணியில் அமர்த்தியிருந்தனர். மேலும், இக்கட்டுரை மியன்மா சிறைச்சாலை நிருவாகத்தில் இந்தியர்களின் வேலைவாய்ப்பையும் தண்டனை சிறை கைதிகளுக்குத் தண்டனை வழங்குவதில் இந்தியர்கள் ஆதிக்கம் செலுத்தியதையும் ஆய்வு செய்கின்றது.

ஆய்வுக் கட்டுரைகள் தவிர்த்து, மியன்மா தமிழர்கள் தொடர்பான வரலாற்றுப் புத்தகங்களும் வெளியிடப்பட்டுள்ளன. வேணுகோபாலன்,கோ. (2014), பொன்னொளிவீசும் புண்ணிய பூமி பர்மா எனும் மியன்மா என்னும் தலைப்பில் மியன்மா தமிழர்கள் பற்றிய வரலாற்றுப் புத்தகம் எழுதியுள்ளார். இப்புத்தகத்தில் மியன்மாவில் தமிழர் குடியேற்றம், மியன்மா மன்னர் பரம்பரை, முதலாம் உலகப் போரில் மியன்மா, மியன்மாவில் சப்பானியர் ஆட்சி, நேதாஜியும் மியன்மாவும், இந்திய தேசிய இராணுவம், மியன்மாவுக்கு ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை, மியன்மாவில் இராணுவ ஆட்சி, தமிழர்கள் மியன்மாவிலிருந்து தாயகம் திரும்புதல் ஆகிய தலைப்புகளில் மியன்மா தமிழர்களின் வரலாற்றைத் தொகுத்துக் கூறியுள்ளார்.

மாத்தளை சோமு (2017), பாலி முதல் மியன்மா வரை என்ற நூலை எழுதியுள்ளார். மாத்தளை சோமு அவர்கள் பாலிக்கும் மியன்மாருக்கும் பயணம் மேற்கொண்ட போது பெற்ற அனுபவங்களைப் பயணக் கட்டுரைகளாக எழுதி இந்நூலில் இடம்பெற செய்துள்ளார்.

மாத்தளை சோமு (2017), பர்மாவும் தமிழர்களும் என்ற மேலும் ஒரு நூலை எழுதியுள்ளார். இந்நூல் பர்மாவுக்கும் தமிழருக்குமுள்ள தொடர்பைத் தெளிவாக விளக்குகிறது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில்தான் தமிழர்கள் அதிகமாக மியன்மாவுக்குப் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர். ஆனால், மியன்மாவில் நடைபெற்ற இராணுவ ஆட்சியின் போது

அதிகமான தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாகத் திரும்பினர்.

மேலும், மியன்மா தமிழ்க் கல்வி வளர்ச்சி மைய முயற்சியில் மலேசிய சொகூர் மாநிலத் தமிழர் சங்கமும் சிங்கப்பூர் தமிழ் அமைப்புகளின் ஒன்றிணைந்த ஏற்பாட்டில் மியன்மா மலேசியா சிங்கப்பூர் தமிழ் உறவுப்பாலம் மாநாடு 2014ஆம் ஆண்டு ஜூன் 6, 7, 8 ஆகிய மூன்று நாள்கள் யாங்கோன், மியன்மாவில் நடத்தப்பட்டுள்ளது. இம்மாநாட்டில் படைக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைத் திரட்டி ஓர் ஆய்வடங்கல் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாய்வடங்களில் இருபதுக்கும் மேற்பட்ட மியன்மா தமிழர்கள் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

### ஆய்வுநெறிமுறைகள்

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில்கள ஆய்வு, நூலாய்வு ஆகிய இரண்டு அணுகுமுறைகள் கையாளப்பட்டுள்ளன. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக்கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டன. மேலும், ஆய்வாளர்கள் மியன்மாவுக்குச் சென்று களஆய்வு வழியும்தரவுகளைத் திரட்டியுள்ளார். களஆய்வில் நேர்க்காணல் அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. யாங்கோனில் தமிழ் வளர்ச்சி மையப் பொறுப்பாளர்கள், தமிழ் இல்லம் திருக்குறள் பேரவை பொறுப்பாளர்கள், கலைமகள் தமிழ்க்கல்வி நிறுவனப் பொறுப்பாளர்கள், திருவள்ளுவர் கோட்டப் பொறுப்பாளர்கள் ஆகியோரிடம் இந்தநேர்காணல் மேற்கொள்ளப்பட்டுத் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

### ஆய்வுத்தரவுகள்பகுப்பாய்வு

ஆய்வுத்தரவுகள் மியன்மாவுக்குத் தமிழர்களின் வருகை; மியன்மாவில் தமிழ்க்கல்விவளர்ச்சி ஆகிய இரண்டு தலைப்புகளில் ஆய்வுத்தரவுகள் பகுப்பாயப்பட்டுள்ளன.

### மியன்மாவுக்குத் தமிழர்களின் வருகை

தமிழர்கள் தமிழ்நாடு, ஈழம் ஆகிய இடங்களிலிருந்து உலகின் பல்வேறு இடங்களுக்குப் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர். பல்லவர் ஆட்சிக்காலத்திலும் சோழர் ஆட்சிக்காலத்திலும் தமிழர்கள் தென்கிழக்காசியாவிற்கு வணிகம் செய்ய பாய்மரக்கப்பலில் பயணம் செய்துள்ளனர். பல்லவ அரசர்களும் சோழஅரசர்களும் கடற்படையை அனுப்பி தென்கிழக்காசியாவில் ஆட்சிஅமைத்துள்ளனர். இவ்வாறு சிறப்புப் பெற்ற தமிழர்களை 19ஆம்நூற்றாண்டில், ஆங்கிலேயர்களும் டச்சுக்காரர்களும் பிரான்சுக்காரர்களும் மலேசியா, சிங்கப்பூர், மியன்மா, மொரிசியஸ், ரியூனியன், பீஜி, தென்ஆப்பிரிக்கா, இந்தோனேசியா போன்ற நாடுகளுக்குக் கூலிகளாகக் கொண்டு சென்றுள்ளனர். இவ்வாறு ஆங்கிலேயர்களால் கொண்டு செல்லப்பட்டவர்களில் மியான் மாதமிழர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியா, சீனா, மங்கோலியா ஆகிய நாடுகளிலிருந்து மியன்மாவிற்கு வந்து பலர் குடியேறியுள்ளனர். இவர்கள் இந்நாட்டில் வசித்து வந்த பூர்வக்குடி மக்களைத் திருமணம் செய்துகொண்டு பர்மியர்கள், ஷா, கரின், கச்சின், யக்கைன், மூன், கயா போன்ற தனித் தனி இனங்களாகவும் வெவ்வேறு மொழி பேசுபவர்களாகவும் பிரிந்தனர். மியன்மாவின் வட பகுதியில் பர்மியர் இனமும் தென் பகுதியில் மானர் இனமும் அதிகம் வழ்கின்றனர். இவர்களில் மானர்கள் நாகரீகம் வாய்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். மானர்கள் இந்தியாவின் நாகரிகத்தையும், பௌத்த சமயத்தையும் மியன்மாருக்குக் கொண்டு வந்தனர்.

தொடக்கக் காலத்தில், மியன்மாவில் வட இந்தியர்களின் தொடர்பு தரை வழியாகவும் பிற்காலத்தில் தென் இந்தியர்களின் தொடர்பு கடல் வழியாகவும்

ஏற்பட்டன.மானர் இன மக்களுக்கும் தமிழகத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததை வரலாற்றுச் சான்றுகளில் காணமுடிகின்றது.தமிழகத்தைச் சோழர்கள் ஆட்சி செய்தபோது தமிழர்கள் மியன்மாவின் தென் பகுதியில் அதிகமாகக் குடியேறினர். சோழ மன்னன் கரிகால் வளவன் கடல் வழியாகப் படையெடுத்து வெற்றிப்பெற்று மியன்மாவின் தென்பகுதியான பக்கோவரையில் அரசாட்சி செய்ததாக வரலாறு கூறுகின்றது. தற்பொழுதுகூட மியன்மாவின் தென்பகுதிகளிலேயே தமிழர் குடியிருப்புகள் அதிகமாக இருப்பதைக் காணலாம். இதற்குக் காரணம் கடல் வழியாக வந்த தமிழர்கள் மியன்மாவின் கடல் பகுதி நிறைந்திருக்கும் தெற்குப் பகுதியில் ஆங்காங்கே குடியேறியதே ஆகும் (வேணுகோபாலன், 2014).

இராசேந்திரன் சோழன் ஆட்சி காலத்தில் இவர் மியன்மாவில் நாட்டிய வெற்றிக்கொடி கம்பம் ஒன்று பாகானில் 1936ஆம் ஆண்டில் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது. கடல் வழியாக மியன்மா வந்த தமிழர்கள் அயிராவதி நதி வழியாக உட்பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள கரையோர நகரங்களில் வியாபரத்தில் ஈடுப்பட்டுள்ளனர். மேலும், இவர்கள் பகான் வரை சென்று அங்குக் குடியேறியும் உள்ளனர். மேலும், 931ஆம் ஆண்டில் பகானில் மகாவிஷ்ணுவிற்குக் கோவில் எழுப்பி மகாவிஷ்ணு அனந்தசயன சிலையையும் நிறுவியதாக வரலாறு கூறுகின்றது. இக்காலக் கட்டத்தில் ஆட்சி செய்த தவுங்துகி என்ற மன்னரும் அப்பகுதியில் வாழ்ந்த மியன்மா மக்களும் விஷ்ணுவழிபாட்டைக் கடைப்பிடித்துவந்தனர் (Trager Frank, 1966).

இப்பகுதியில், 1961ஆம் ஆண்டு முதல் 1962ஆம் ஆண்டு வரைமியன்மா அரசாங்கம் அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டது. இவ்வாராய்ச்சியின் மூலம் இப்பகுதியில் புதையுண்ட அரசமாளிகைகள், அரசவை, சிறைச்சாலைகள் போன்ற கட்டடங்களும் வெள்ளிநாணயங்களும் பொறகாசுகளும் மண்பானைகளும் அப்பானைகளுக்குள் இறந்து போனவர்களின் சாம்பல், எழும்புத்துண்டுகள் ஆகியவையும் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன. மேலும், இப்பகுதியில் லிங்கம் போன்ற வட்டமான கல் ஒன்றையும் கண்டெடுத்துள்ளனர். இப்பகுதியில் சைவ சமயமும் மேலோங்கி இருப்பதைக் காட்டுகிறது. இப்பகுதியை மியன்மா அரசாங்கம் பழைய விஷ்ணு நகர் என்று அறிவித்துள்ளது (Trager Frank, 1966).

1044 முதல் 1077 வரை ஆட்சிசெய்த அனவ்ரதா என்ற மன்னர் பாகானைத் தனது ஆட்சிக்குள் இணைத்துக்கொண்டார்.இம்மன்னர்தான் புத்த சமயத்தைப் பகானுக்குக் கொண்டு வந்ததாக வரலாறு கூறுகிறது. இவர் காலத்தில் பாகானில் 4000 பௌத்தாலயங்கள் கட்டப்பட்டன. மேலும், இந்து சமய வழிபாடுகளும் உயிர் பலிகளும் அடியோடு அகற்றப்பட்டன. இவர் காலத்தில் பௌத்த சமயம் மியன்மா முழுவதும் பரவியது (Trager Frank, 1966).

அனவ்ரதா மன்னர் ஆட்சிக் காலத்தில் பகான் பகுதியில் வாழ்ந்த மியன்மா மக்கள் கலையிலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கவில்லை. தமிழர்களின் கலைகளும் பண்பாடுகளும் வழிபாடுகளும் இவர்களைப் பண்படுத்தியுள்ளன. பகான் மக்களின் கட்டடக்கலைகள், பண்பாடுகள், வழிபாடுகள் ஆகிய அனைத்திலும் தமிழர்களின் நாகரீகத் தாக்கத்தைக் காணமுடிகின்றன. பிற்காலத்தில் படிப்படியாக மாறிக்கொண்டே வந்தபோதும், இன்றுவரை மியன்மா மக்களின் பழக்கவழக்கங்களிலும் பண்பாடுகளிலும் வழிபாடுகளிலும் எழுத்து வடிவங்களிலும் சொற்களிலும் தமிழர்களின் தாக்கத்தைக் காணலாம். மியன்மா மக்களின் பண்பாட்டு நடனங்களிலும் தமிழர்களின் நடனக் கலையின் சாயல் இருப்பதைக் காண முடிகின்றது. மேலும், குபியவ்ஜீ எனும் பௌத்தாலயத்தில் காணப்படும் சிற்பங்களும் சித்திரங்களும் தமிழ் நாட்டுப் பாணியில் அமைந்துள்ளன (வேணுகோபாலன், 2014). இவையனைத்தும் சோழர் காலத்தில் தமிழர்கள் மியன்மாவில் வாழ்ந்த சான்றைக் காட்டுகிறது.

தெற்காசியாவிற்கு வணிகம் செய்ய வந்த ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியர்,

இந்தியா, மியன்மா, மலாயா போன்ற நாடுகளைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டு ஆட்சி செலுத்தியுள்ளனர். மியன்மா நாட்டைத் தங்கள் வசப்படுத்திக்கொள்ளும் நோக்கில் ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியர் மியன்மா, கோன்பவுங் அரசுக்கு எதிராக மூன்று போர்கள் நடத்தினர். முதலாம் போர் 1824 முதல் 1826ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. இப்போரில் ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியர் வெற்றி பெற்றனர். ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியரும் கோன்பவுங் அரசும் யாந்தோபூ என்ற உடன்படிக்கையில் கையொப்பம் இட்டனர். ஒப்பந்தப்பந்தத்திற்கு ஏற்பகோன்பவுங் அரசின் கீழ் இருந்த இந்தியப் பகுதிகளான அசாம், மணிப்பூர், மியன்மா அரக்கான் மலைத்தொடர் ஆகிய பகுதிகளை ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியருக்குக் கோன்பவுங் அரசு விட்டுக் கொடுத்தது (Daniel George Edward Hall. 1968).

ஆனாலும், யாந்தோபூ உடன்படிக்கையில் சில சிக்கல்கள் ஏற்பட்டன. இச்சிக்கலைச் சரி செய்வதற்காக, ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியின் கவர்னர் ஜெனரல் டல்ஹவுசி பிரபு, 1852ஆம் ஆண்டில் கடற்படை அதிகாரி லம்பார்ட்டை மியன்மாவுக்கு அனுப்பிவைத்தார். இச்சிக்கலைச் சரி செய்ய இயலாது போனதால், ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியர் மியன்மா மீது இரண்டாம் கட்டப் போரை நடத்தினர். இப்போர் 1852 முதல் 1853ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. இரண்டாம் கட்டப் போரில், ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியர் மியன்மாவின் பெரும் பகுதியைக் கைப்பற்றிக்கொண்டனர் (Daniel George Edward Hall, 1968).

இப்போரினால் மியன்மா அரசக் குடும்பத்தில் கலகம் ஏற்பட்டது. இதனால், ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியர் 1846 முதல் 1852ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்த கோன்பவுங் அரசர் பாகன் மிங்கை ஆட்சியிலிருந்து நீக்கிவிட்டு, அவரது மாற்றாந்தாயின் மகன் மிண்டன் மிங்கை கோன்பவுங் அரசராக நியமித்தனர். இவர் 1853 முதல் 1878ஆம் ஆண்டு வரை கோன்பவுங் அரசராக ஆட்சி பொறுப்பை வகித்தார். மன்னர் மிண்டன் மிங், ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியரிடமிருந்து நாட்டைக் காத்துக் கொள்வதற்காக, தலைநகரை, இரங்கூனிலிருந்து மண்டலைக்கு மாற்றி நாட்டை வலுப்படுத்தினார். மிண்டன் மிங்கிற்குப் பிறகு, மன்னர் திபா மிங் ஆட்சி பொறுப்பை ஏற்றார். இவர் 1878 முதல் 1885ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்தார். இவர் காலத்தில் மியன்மா எல்லைப்புறங்களில் கலவரங்கள் ஏற்பட்டன. இக்கலவரங்களை மன்னர் திபா மிங்கால் அடக்க இயலாது போனது. மேலும், மிண்டன் மிங் காலத்தில் ஆங்கிலேயருடன் செய்து கொண்ட ஒப்பந்தகளைத் திபா மிங் மீறியதால், ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியர் மியன்மா மீது 1885ஆம் ஆண்டில் மூன்றாம் கட்டப் போரை நடத்தினர். இப்போரில் வெற்றிபெற்ற ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியர் மியன்மா முழுவதையும் இந்தியாவுடன் இணைத்துக் கொண்டனர் (Daniel George Edward Hall, 1968).

தொடர்ந்து, 1897 முதல் 1937ஆம் ஆண்டு வரை வடக்கு மியான்மாவையும் தெற்கு மியான்மாவையும் இணைத்து, துணைநிலை ஆளுநர் தலைமையில் ஆங்கிலேயர்கள் மியான்மாவை ஆட்சி செய்தனர். 1937ஆம் ஆண்டில், நிர்வாக வசதிக்காக இந்தியாவிருந்து மியன்மாவைத் தனியாகப் பிரித்துத் துணைநிலை ஆளுநரின் கட்டுப்பாட்டின் கீழ் மியான்மாவை ஆட்சி செய்தனர். 1942ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப் போரின் போது சப்பானிய இராணுவம் மியன்மாவை ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றிகொண்டது. 1945ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போரின் இறுதியில் ஆங்கிலேய இராணுவம் மீண்டும் மியன்மாவை சப்பானிடமிருந்து கைப்பற்றியது. 4 ஜனவரி 1948ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் மியன்மாவுக்கு விடுதலை வழங்கினர் (Daniel George Edward Hall, 1968).

இவ்வாறு, 1824ஆம் ஆண்டு முதல் மியன்மா மீது ஆதிக்கம் செலுத்திய ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியர், படிப்பறிவில்லாத தமிழர்களை நெல் வயல்களிலும் கட்டுமான துறைகளிலும் வேலை செய்வதற்கும் படித்த

தமிழர்களை அரசாங்கத் துறைகளில் வேலை செய்வதற்கும் அழைத்து வந்தனர். இவர்களோடு செட்டியார் சமூகத்தவர் வட்டித் தொழில் செய்வதற்கும் நெல் விவசாயம் செய்வதற்கும் மியான்மாவுக்குப் புலம்பெயர்ந்து வந்தனர்.ஆங்கிலேயர்களைத் தவிர்த்து, செட்டியார்களும் தங்கள் விவசாய நிலங்களில் நெல் பயிரிடுவதற்குத் தமிழர்களை மியன்மாவுக்கு அழைத்து வந்துள்ளனர்(Chakravarti, 1971).

### மியன்மாவில் தமிழ்க்கல்வி வளர்ச்சி

1824ஆம் ஆண்டு முதல், கட்டம் கட்டமாக மியன்மாவுக்குப் புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்களுடன் மொழி, சமயம், பண்பாடு ஆகியவற்றையும் உடன் கொண்டு வந்தனர். மியன்மாவுக்குப் புலம்பெயர்ந்து வந்த தமிழர்களில் படிப்பறிவுமிக்க தமிழர்களும் செட்டியார் சமூகத்தவரும் இடம்பெற்றிருந்ததால் மியன்மாவில் தமிழ்க்கல்வி வளர்ச்சி அடைந்தது.

தொடக்கக் காலத்தில், மியன்மா தமிழர்கள் சொந்தமாகத் தமிழ்ப்பள்ளிகளை அமைத்து, தமிழகத்திலிருந்து தமிழாசிரியர்களையும் தமிழ்ப் பண்டிதர்களையும் தருவித்துத் தமிழ் மாணவர்களுக்குப் பாடம் நடத்தியுள்ளனர். மியன்மாரில் முதலாம் வகுப்புத் தொடங்கி பதினோறாம் வகுப்பு வரை எல்லாப் பாடங்களையும் தமிழ்மொழியில் நடத்தியுள்ளனர். மியன்மார் தமிழர்கள் பொருளாதாரத் துறையில் வளமாக இருந்ததால் இது சாத்தியமாக அமைந்துள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், மியன்மாவில் பல்வேறு தரப்பினர் தமிழ்ப்பள்ளிகளைத் தொடங்கியுள்ளனர். இவர்களில் செட்டியார் சமூகத்தவர், ரெட்டியார் சமூகத்தவர், தேவர் சமூகத்தவர் ஆகியோரும் அடங்குவர். வட்டித் தொழில் நடத்த மியன்மா வந்த செட்டியார் சமூகத்தவர்கள் கோயில்களையும் தமிழ்ப்பள்ளிகளையும் அமைத்துள்ளனர். இச்சமூகத்தினர் செட்டியார் உயர் நிலைப்பள்ளியை அமைத்துள்ளனர். இப்பள்ளி யாங்கோன் திருகம்பை என்னும் இடத்தில் அமைந்துள்ளது. தொடக்கக் காலத்தில் இப்பள்ளியில் முதலாம் வகுப்புத் தொடங்கிப் பதினோறாம் வகுப்பு வரை தமிழ் மாணவர்கள் கல்வி பயின்றுள்ளனர். 1962ஆம் ஆண்டு இப்பள்ளி இராணுவ ஆட்சியின் தேசியமயக் கொள்கையின் கீழ் அரசுடமையாக்கப்பட்டது. தற்பொழுது, இப்பள்ளி மியன்மா கல்லூரியக்ச் செயல்பட்டு வருகின்றது (குமார், நேர்காணல் 3.3.2020).

செட்டியார் சமூகத்தினரைத் தவிர்த்து, யாங்கோனில் பெரும் தொழிலதிபராக இருந்து வந்துள்ள ராமநாத ரெட்டியார் என்பவர் ரெட்டியார் உயர்நிலைப்பள்ளியை அமைத்துள்ளார். இப்பள்ளியில் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி பயின்றுள்ளனர். இப்பள்ளியிலும் முதலாம் வகுப்புத் தொடங்கி பதினோறாம் வகுப்பு வரை தமிழ் மாணவர்கள் கல்வி பயின்றுள்ளனர்.இப்பள்ளியில் பணியாற்றுவதற்குத் தமிழகத்திலிருந்து பண்டிதர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். இராணுவ ஆட்சி நடைபெறுவதற்கு முன்னால், ராமநாத ரெட்டியார் இப்பள்ளியை அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டார். தற்பொழுது, இப்பள்ளி அரசாங்க உயர்நிலைப்பள்ளியாகச் செயல்பட்டு வருகின்றது (குமார், நேர்காணல் 3.3.2020).

மேலும், தேவர் சமூகத்தைச் சார்ந்தவர்களும் தமிழ்ப்பள்ளிகளை அமைத்துள்ளனர். தேவர் சமூகத்தவர்களும் செட்டியார்களைப் போலவே பல்வேறு தொழில்களை மியான்மாவில் தொடங்கியுள்ளனர்.இச்சமூகத்தினர், தேவர் எஸ்டேட் அவுக்கலாப்பா நடுநிலைப்பள்ளியை அமைத்துள்ளனர். இப்பள்ளி, தேவர் எஸ்டேடில் நெல் பயிரிடும் வேலை செய்யும் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பயில்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இப்பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை மாணவர்கள் கல்வி பயின்றனர். எட்டாம் வகுப்பில் தேர்ச்சிபெறும் மாணவர்கள் தங்கள் கல்வியை உயர்நிலைப்பள்ளிகளில் தொடர்வார்கள் (குமார், நேர்காணல் 3.3.2020).

குறிப்பிட்ட சமூகத்தினரைத் தவிர்த்து, தமிழ் முசுலிம்களும் தமிழ்ப்பள்ளிகளை அமைத்துள்ளனர். இவர்கள் சோலியா முசுலிம் மேல் நிலைப்பள்ளியை அமைத்திருந்தனர். தொடக்கக் காலத்தில், இப்பள்ளியில் காலை வேளையில் தமிழ்மொழியும் மாலை வேளையில் அரபுமொழியும் கற்பிக்கப்பட்டு வந்துள்ளது. 1962ஆம் ஆண்டுக்குப் பின் பள்ளி விடுமுறை நாள்களில் முசுலீம் மாணவர்களுக்குத் தமிழ்மொழி கற்பிக்கப்பட்டு வருகின்றது (குமார், நேர்காணல் 3.3.2020).

இதனைத் தவிர்த்து, புனித அந்தோணியார் தேவாலயம் ஒரு தமிழ்ப்பள்ளியை அமைத்துள்ளனர். புனித அந்தோணியார் உயர்நிலைப்பள்ளி என்று அழைக்கப்பட்ட இப்பள்ளியில் சபை உறுப்பினர்களின் குழந்தைகளும் சுற்றுவட்டாரக் குழந்தைகளும் கல்வி கற்றனர். இப்பள்ளித் தேவாலய வளாகத்திற்குப் பக்கத்தில் கட்டப்பட்டிருந்தது. இப்பள்ளியில் பயிற்றுவிப்பதற்காகத் தமிழகத்திலிருந்து கன்னியாஸ்திரிகளும் தமிழாசிரியர்களும் கொண்டு வரப்பட்டனர். தேசியமயமாக்கும் கொள்கையின் கீழ் இப்பள்ளியை அரசாங்கம் நாட்டுடைமையாக்கிக் கொண்டது. தற்பொழுது, இப்பள்ளி அரசாங்கப்பள்ளியாகச் செயல்பட்டு வருகின்றது (குமார், நேர்காணல் 3.3.2020).

இவற்றைத் தவிர்த்து, நூற்றுக்கணக்கான தொடக்க, நடுநிலை, இடைநிலை, உயர்நிலைத் தமிழ்ப்பள்ளிகள் மியன்மாவில் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்தன. 1964ஆம் ஆண்டு வரை இப்பள்ளிகள் செயல்பட்டு வந்துள்ளன. தமிழகம், இலங்கை ஆகிய நாடுகளை அடுத்து, தமிழ்ப்பள்ளிகள் மிக சிறப்பாகச் செயல்பட்ட இடமாக மியன்மா திகழ்ந்து வந்தது. இங்கு முதலாம் வகுப்புத் தொடங்கி பதினோராம் வகுப்பு வரை அனைத்துப் பாடங்களும் தமிழ்மொழியிலேயே கற்பிக்கப்பட்டு வந்துள்ளன.

மியான்மா ஆங்கிலேயரிடமிருந்து 1948ஆம் ஆண்டு விடுதலைப்பெற்ற பின்னும் இந்நிலை தொடர்ந்து வந்தது. 2.3.1962இல் மியான்மாவில் இராணுவ ஆட்சி ஏற்பட்டது. இராணுவ ஆட்சியில் தமிழர்களின் சொத்துகளும் தமிழ்ப்பள்ளிகளும் நாட்டுடமை ஆக்கப்பட்டன. இதனால், தமிழ்ப்பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டன. மியன்மாவில் மியன்மா மொழியும் ஆங்கிலமும் மட்டுமே கற்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. வேறு வழியின்றி தமிழர்கள் தங்கள் பிள்ளைகளை அரசாங்கம் நடத்தும் மியன்மா மொழிப் பள்ளிகளுக்கு அனுப்பி வைத்தனர். 1962ஆம் ஆண்டுக்குப் பின், வீடுகளிலும் ஆலயங்களிலும் தமிழ்மொழி சிறிய அளவில் கற்பிக்கப்பட்டு வந்தது. 1962ஆம் ஆண்டு முதல் 2000ஆம் ஆண்டு வரை மியன்மாவில் தமிழ் கற்பிப்பதற்கான எந்த ஆக்ககரமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதன் காரணமாக, இளைய தலைமுறையினரிடையே தமிழ் பேசும் திறன் குறைந்து காணப்பட்டது.

மியன்மா தமிழர்களிடையே தமிழ் பேசும் திறன் குறைந்து வருவதைக் கண்ட தட்டோன் இளைஞர்கள் 1975ஆம் ஆண்டில் தமிழ் இல்லம் திருக்குறள் பேரவை என்ற அமைப்பைத் தோற்றுவித்தனர். தொடக்கக் காலத்தில் இவ்வமைப்புச் சிறிய அளவில் தமிழ் வகுப்புகளைப் பள்ளி விடுமுறை காலங்களில் நடத்தி வந்துள்ளது. 2000ஆம் ஆண்டுக்குப் பின், தமிழ் இல்லம் திருக்குறள் பேரவை தங்கராசன் அறக்கட்டளையுடன் இணைந்து பெரிய அளவில் தமிழ் வகுப்புகளை நடத்தி வருகின்றனர்.

மியன்மாவில் பதின்நான்கு மாநிலங்கள் இருக்கின்றன.இவற்றில் மூன், கரின் ஆகிய இரண்டு மாநிலங்களில் அதிகமான தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். தமிழ் இல்லம் திருக்குறள் பேரவை இவ்விரண்டு மாநிலங்களில் வாழ்கின்ற தமிழர்களுக்குத் மியன்மா தேசியப்பள்ளி விடுமுறை காலமாகிய மார்ச்சு முதல் மே ஆகிய மூன்று மாதங்களுக்குத் தமிழ் வகுப்புகள் நடத்துகின்றனர். இவ்வகுப்புகள் காலை 8.00 மணி முதல் 12.00 வரையும் மாலை 1.00 முதல் 3.00 மணி வரையும் நடத்தப்படுகின்றது. இவ்விரு மாநிலங்களில் 60 தமிழ்ப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் 2000

மாணவர்கள் முதலாம் வகுப்புத் தொடங்கி ஆறாம் வகுப்பு வரை தமிழ் பயில்கின்றனர். இப்பள்ளிகளில் 60 தமிழாசிரியர்கள் பணியாற்றுகின்றனர். மூன்றாவது மாத இறுதியில் தேர்வு நடத்தப்படுகின்றது. இத்தேர்வில் வெற்றிபெறும் மாணவர்கள் மறு ஆண்டு விடுமுறையில் அடுத்த வகுப்புக்கு உயர்த்தப்படுகின்றனர் (ராகுநாதன், நேர்காணல் 4.3.2020).

இவ்வகுப்புகளுக்குத் தேவையான பாட நூல்களைத் தமிழ் இல்லம் திருக்குறள் பேரவை தயாரித்துத் தருகின்றனர்.இதற்கான செலவுகளைத் தங்கராசன் அறக்கட்டளை ஏற்றுகொண்டுள்ளது. மேலும், தங்கராசன் அறக்கட்டளை இப்பள்ளிகளில் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஆண்டிற்கு 50 ஆயிரம் கியாவை சம்பளமாக வழங்குகின்றனர்.ஆறாம் வகுப்பு முடித்தவுடன் மாணவர்கள் திருக்குறள் வகுப்பிற்கு மாற்றப்படுகின்றனர். தற்பொழுது, தமிழ் இல்லம் திருக்குறள் பேரவை ஏழாம் வகுப்புத் தொடங்கி பதினோராம் வகுப்பு வரைக்குமான பாடத்திட்டங்களையும் பாட நூல்களையும் தயாரித்து வருகின்றனர். இப்பணி நிறைவடைந்தவுடன் ஆறாம் வகுப்பை முடிக்கும் மாணவர்கள் பதினோராம் வகுப்பு வரை தமிழ் பயிலும் வாய்ப்பைப் பெறுவார்கள் (ராகுநாதன், நேர்காணல் 4.3.2020).

மேலும், தமிழ் இல்லம் திருக்குறள் பேரவை தயாரிக்கும் பாட நூல்களைப் பயன்படுத்தி, கலைமகள் தமிழ்க்கல்வி நிறுவனமும் திருவள்ளுவர் கோட்டமும் தமிழ் வகுப்புகளை அவர்கள் வட்டாரங்களில் நடத்தி வருகின்றனர்.

தமிழ் இல்லம் திருக்குறள் பேரவையை அடுத்து, யாங்கோனில் செயல்படும் தமிழ்க்கல்வி வளர்ச்சி மையம் யாங்கோனில் வாழும் தமிழர்களுக்கும் மூன், கரிம் ஆகிய மாநிலங்களைத் தவிர்த்து மற்ற மாநிலங்களில் வாழும் தமிழர்களுக்கும் தமிழ் வகுப்புகள் நடத்துகின்றனர். தமிழ்க்கல்வி வளர்ச்சி மையம் 2012ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ்வமைப்பும் மியன்மா தேசியப்பள்ளி விடுமுறை காலமாகிய மார்ச்சு முதல் மே ஆகிய மூன்று மாதங்களுக்குத் தமிழ் வகுப்புகள் நடத்துகின்றனர். இவர்களும் பள்ளி விடுமுறை காலங்களில் காலை 8.00 மணி முதல் 12.00 மணி வரையும் மாலை 2.00 மணி முதல் 5.00 மணி வரையும் தமிழ் வகுப்புகளை நடத்துகின்றனர். இவ்வமைப்பின் கீழ் 140 பள்ளிகள் செயல்படுகின்றன. இப்பள்ளிகளில் 4,500 மாணவர்கள் தமிழ் பயில்கின்றனர். இவர்களுக்கு 300 ஆசிரியர்கள் தமிழ் கற்பிக்கின்றனர். இப்பள்ளிகளில் இதுவரை 30 ஆயிரம் மாணவர்கள் தமிழ் படித்துள்ளனர் (இளங்கோவன், நேர்காணல் 3.3.2020).

இவ்வமைப்பும் தங்களுக்கான பாடத்திட்டத்தையும் பாட நூல்களையும் தயாரிக்கின்றனர். இவ்வகுப்புகளை நடத்துவதற்கு ஏறக்குறைய 242 தனி நபர்கள் மாதம் 10 ஆயிரம் கியாவை நன்கொடையாக வழங்குகின்றனர். நன்கொடை வழங்குபவர்களில் 10 விழுக்காட்டினர் வியாபாரிகள், 50 விழுக்காட்டினர் விவசாயிகள், 40 விழுக்காட்டினர் மற்ற வேலைகள் செய்பவர்கள். இந்நன்கொடையைக் கொண்டே இலவசப் புத்தகங்கள் வழங்குவதற்கான செலவுகளையும் ஆசிரியர்களுக்கான சம்பளங்களையும் வழங்குகின்றனர். இந்த அமைப்பிற்கான வரவு செலவு கணக்குகளை ஒவ்வொரு மாதமும் உங்கள் எதிர்காலம் எனும் மாத இதழில் வெளியிடுகின்றனர் (செல்வக்குமார், நேர்காணல் 3.3.2020).

## முடிவுரை

மியன்மாவில் 1962ஆம் ஆண்டு வரை உச்சத்தில் இருந்த தமிழ்மொழி, இராணுவ ஆட்சியின் கீழ் பாதகமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. 2000ஆம் ஆண்டுக்குப் பின் தமிழ் இல்லம் திருக்குறள் பேரவையும் தமிழ்க்கல்வி வளர்ச்சி மையமும் மியன்மாவில் மீண்டும் தமிழ்மொழி செழித்தோங்குவதற்கான ஆக்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். இன்னும் பத்தாண்டுகளில் மியன்மாவில் தமிழ்மொழியின் வளர்ச்சி மேலோங்கும் என்பதில் ஐயமில்லை.

## References

Chakraborty Ankita. (2018). Burma Colonies of West Bengal: A Study of the Contemporary Status of Burmese Indians. *International Journal of Research in Social Sciences*. (Volume: 8, Issue: 9. pp. 435-443).

Chakraborty Ankita. (2019). The Socio Economic Status of Indians Migrants' in Myanmar in the Colonial years (1824–1948): An Overview. *International Journal of Research in Social Sciences*. (Volume: 9, Issue: 1. pp. 871-879).

Chakravarti, N. R, (1971). *The Indian Minority in Burma – The Rise and Decline of an Immigrant Community*. London: Oxford University Press.

Daniel George Edward Hall. (1968). *A History of South East Asia*. New York.

Harkirat Singh. (2019). Ethnic Indians in Burma and Malaya: A Study of the Colonial Period. *Journal of Multidiscoplinary Subjects*. (Vol. 13.Issue 1. p. 966-971).

Hmma Balakrishnan. (2019). Whose language is it anyway? Challenges to Tamil language revitalisation efforts in Myanmar. *South Asian Diaspora*. Received 24 Aug 2018, Accepted 06 Mar 2019, Published online: 20 Aug 2019.

James Warren. (2002), The Rangoon jail riot of 1930 and the prison administration of British Burma. *South East Asia Research*. (Vol. 10, No. 1 (MARCH 2002), pp. 5-29). Taylor & Francis, Ltd.

Mathalai Somu. (2017). *Bali Mutal Myanmar Varai*. Thirucy: Tamil Kural Pathipagam.

Mathalai Somu. (2017). *Barmavum Tamilarkalum*. Chennai: Tamil Kural Pathipagam.

Mohammad Janesar & Rajesh Sahu. (2019). The Role of Indian Diaspora:A Look at India-Myanmar. *IUP Journal of International Relations*. (Vol. 13, Iss. 3. p. 53-67).

*Myanmar – Malaysia – Singapore Tamil Uravupalam Manadu Sirappu Malar*. (2014). Yangon: Myanma Tamil Valarssi Maiyam.

Nadaraja Pillai, N. (2018). Contributions of the Tamils to the Writing Systems of Some South-East Asian Countries. *Language in India*. (Vol. 18:1. p. 395-413).

Nongthombam Jiten. (2018). The Position of Meitei in the Study of Indian Diasporain Myanmar. *Himalayan and Central Asian Studies*. (Vol. 18, Nos. 1-2).

Renaud Egreteau. (2011). Burmese Indians in contemporary Burma: heritage, influence, and perceptions since 1988. *Asian Ethinicity*.(Volume 12. 2011. Issue 1. Pages 33-54).

Renaud Egreteau. (2013). India's Vanishing "Burma Colonies". Repatriation, Urban Citizenship, and (De) Mobilization of Indian Returneesfrom Burma (Myanmar) since the 1960s. *Social Scince Research on South East Asia*. (pp. 11-34).

Sarita Rai. (2015). *The Role of Indian Diaspora in India Myanmar Relations. Master of Philosophy*. Department of International Relations, School Of Social Sciences.Sikkim University.

Soe Soe Oo. (2011). *The Role of Chettyars in the Economy of Myanmar during the Colonial Period*. Yangon: Universiy of Yangon.

Sunil S Amrith. (2014). Migration and health in southeast Asian history. *The Lancet*. (Volume 384, Issue 9954, p. 1569-1570).

Tinker, Hugh. (1967). *The Union of Burma: A Study of the First Years of Independence*. London, New York, and Toronto: Oxford University Press.

Trager, Frank N. (1966). *Burma From Kingdom to Republic: A Historical and Political Analysis*. New York: Praeger

Venugopal, K. (2014). *Ponnoli Visum Punniya Bumi Barma Ennum Myanmar*. Chennai: Manikkavasagar Pathipagam.

Vikas Kumar Verma. (2006). Maritime Trade Between Early Historic Tamil Nadu And Southeast Asia. *Proceedings of the Indian History Congress*. (Vol. 66 (2005-2006), pp. 125-134). Indian History Congress.